[5th November 1966

என்ன காரணம்? இரு வகை ஆசிரியர்களுக்கும் இடையே வித்தியாசம் காட்டாமல், சர்க்கார்ப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் எல்லாப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனியார்த் துறைப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் இந்தச் சலுகை கொடுக்க முடியுமா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து கைவிட்டுவிட்டது.

நாட்டு மருந்து பரிசோதனைக் கல்லூரி

* 452 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனத்திலுள்ள தனி நபர் ஒருவர், நாட்டு மருந்து பரிசோதனைக் கல்லூரி ஒன்று நிருவுவதற்கு, மதுராந்தகம் தாலூகா ஆக்தூர் கிராமத்தில் R.S No. 405-ல் உள்ள 25 ஏக்கர் நிலங்கோரி 9—10—1965-ல் செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டருக்கு மனு செய்துள்ளாரா?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Yes.

(b) The area requested for assignment is not available.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : நாட்டு மருந்துப் பரிசோதனைக் கல்லூரி ஒன்று கட்டுவதற்காக மனை கோரப்பட்டு, அதற்கு அனுமதி கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டபிறகு, அந்த மனையை வேறு அரசாங்க அலுவலகத்திற்காக ஏற்பாடு செய்வதாகச் சொல்லிவிட்டதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு எதிரிலேயே பல ஏக்கர் நிலங்கள் காலியாக இருக்கின்றனவாம். அதை யாவது கொடுத்து, அங்கே இதை ஆரம்பிப்பதற்கு வழிவகை செய்யப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினர் இதைப்பற்றித் தகவல் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார். அந்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் கட்டுவதற்கு மனுப் போட்டவருக்கு இப்பொழுது வேறு இடம் கொடுக்கலாம் என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

Compensatory allowance to Medical Officers

* 453 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government have any proposal, to sanction payment of any compensatory allowance to medical officers with L.I.M. or G.C.I.M. qualifications, employed in dispensaries of Indian or Indigenous Medicines under local bodies; and

(b) if so, the details thereof?

5th November 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) தல அதிகார மன்றங்களின் கீழ் (பஞ்சாயத்து யூனியன்களின் கீழும் நகராட்சிகளின் கீழும்) உள்ள இந்திய மருத்துவ அல்லது நாட்டு மருத்துவ மருந்தகங்களில் பணியாற்றும் L.I.M., G.C.I.M. தகுதி பெற்ற மருத்துவ அதிகாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 (ஐம்பது மட்டும்) இழப்பீட்டுப்படி வழங்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. டி இழப்பீட்டுப்படி வழங்குவதற்குரிய செலவைச் சம்பந்தப்பட்ட தல அதிகார மன்றங்களே ஏற்க வேண்டும்; அதற்காக அரசாங்கத்திடம் இருந்து மானியம் எதையும் கேட்கக்கூடாது என்கிற நிபந்தனைக்குட்பட்டே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன்: பொதுவாக, எல்.ஐ.எம்., ஜி.சி.ஐ.எம். படித்தவர்களை அரசாங்கம் ஒரே மாதிரி பாவிக்கிறது. அப்படியிருக்கும்போது, ஜி.சி.ஐ.எம். படித்தவர்களுக்கு இன்டென்சிவ் கோர்ஸ் அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும்போது, எல்.ஐ.எம். படித்தவர்களுக்கு அதுபோன்ற சலுகை வழங்கப்படாததற்குக் காரணம் என்ன? அவர்களுக்கும் அந்தச் சலுகை வழங்கப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எல்.ஐ.எம். படித்தவர்களுக்குக் கண்டென்ஸ்டு கோர்ஸ் வேண்டுமென்று கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்த பிறகுதான் ஒரு முடிவுக்கு வர முடியும்.

கூட்டுறவுச் சங்கங்கள்

* **454 கேள்வி.—திரு. எஸ் ஜே. ராமசாமி:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் தாலுகா (வடார்க்காடு மாவட்டம்) தணிகை போளூர் கிராமத்தில் உள்ள கூட்டுறவு பண்டகசாலையில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பணம் கையாடல் செய்யப்பட்டிருப்பது சம்பந்தமாக யாரேனும் கைது செய்யப்பட்டார்களா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: 'கூட்டுறவு பண்டகசாலை' என்று நான் தவறாக கேள்வி கொடுத்துவிட்டேன். அதைச் சாக்காக வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார். அப்படிச் சொல்லக் கூடாது. அமைச்சர் அவர்களுக்குத் தகவல் வந்திருக்கும். 'க்ரெடிட் சொஸைட்டி' பற்றித்தான் நான்